## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 277/2014 | Date : 03.01.2024 | PW2 |
| --- | --- | --- |
| Name: முத்து | S/o. **நல்லப்பன்** | |
| Evidence Recorded Time: 12.25 P.M. to 12.35 P.M | | |

**9, 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. மதியழகன் தனக்கு ஆதரவாக சாட்சி சொல்ல கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். மதியழகன் எனக்கு உறவினர் என்றால் உறவினர் இல்லை நெருங்கிய நண்பராவார். மதியழகன் எனக்கு நெருங்கிய நண்பர் என்பதால்தான் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் இந்த பிரதிவாதிகளை எதற்காக தரப்பினர்களாக சேர்த்துள்ளார் என்றால் தெரியாது. என்னுடைய பிரமாண பத்திரத்திலும் இந்த பிரதிவாதிகளை எதற்காக தரப்பினர்களாக சேர்த்துள்ளார் என்பது பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு வழக்கு பற்றி எந்த விவரங்களும் தெரியாது என்றாலும் மதியழகன் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஒ ஆவணங்களை சரியாக தாக்கல் செய்யப்பட்டிருப்பின் 10-ம் பிரதிவாதி வில்லங்க விவரங்கள் சரிபார்த்து ஆவணத்தை பதிவு செய்து கொடுப்பார் என்றால் அதுபற்றி தெரியாது. 9, 10 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

ஒம்/-PW2,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.